**மாவட்ட அமர்வு நீதிமன்றம், நாகப்பட்டினம்**

முன்னிலை: திருமதி. ஜி.எம். வசந்தி, எம்.எல்.,

முழுக் கூடுதல் பொறுப்பு மாவட்ட அமர்வு நீதிபதி, நாகப்பட்டினம்

(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)

2026ம் ஆண்டு ஜூன் மாதம் 08ம் நாள் - திங்கட்கிழமை

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் வைகாசி 25-ம் நாள்

**கு.ப.ம.எண் 441/2026**

1. மாபியா (எ) மகேஷ்குமார், த/பெ விஜயகுமார்
2. கிறிஸ்போவனிஸ், த/பெ பெஞ்சமின் ..... மனுதாரர்கள்/ எதிரிகள்

-எதிர்-

காவல் ஆய்வாளர், வேளாங்கண்ணி காவல்நிலையம்,

குற்ற எண் 142/20226 ......எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக இன்று (08.06.2026) விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்தரப்பு சட்ட உதவி பாதுகாப்பு ஆலோசகர் திரு, பி. ஜீவாபாரதி மற்றும் எதிர்மனுதாரர்தரப்பு அரசு வழக்குரைஞர் திரு. ஆர். செல்வராஜ் ஆகியோர் ஆஜராகி எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.....

**//உத்தரவு//**

இம்மனு எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள குற்ற எண் 142/2026ல் பிரிவுகள் 296(b), 351(3) BNS மற்றும் 25(1) (A) இந்திய ஆயுதச் சட்டத்தின் கீழான குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டுள்ள மனுதாரர்கள்/குற்றம் சாட்டப்பட்டவர்களால் பிணை கோரி பிரிவு 483 BNSS ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்கள்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர்கள் நிரபராதிகள் என்றும், மனுதாரர்கள் மீது பொய்யான வழக்கு புனையப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்றும், மனுதாரர்கள் கடந்த 12.05.2026 அன்று கைது செய்யப்பட்டு 28 நாட்களாக நீதிமன்றக்காவலில் உள்ளனர் என்றும், மனுதாரர்கள் குடும்பத்தினர் வருமானம் ஏதுமின்றி மிகுந்த கஷ்ட ஜீவனத்திற்கு ஆளாகி சிரமப்பட்டு வருகிறார்கள் என்றும், எனவே, மனுதாரர்களுக்கு ஜாமீன் வழங்கி உத்தரவிடவேண்டும் என்று கோரினார்.

3. அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் இவ்வழக்கின் புகார்தாரர் வேளாங்கண்ணியில் டாட்டூஸ் கடை வைத்துள்ளதாகவும், மேற்படி எதிரிகள் புகார்தாரரிடம் டாட்டுஸ் போட சொல்லி பிரச்சனை செய்து அதன் காரணமாக புகார்தாரரை எதிரிகள் காமக் குரோதமான வார்த்தைகளால் திட்டியும், முதுகில் மறைத்து வைத்திருந்த கத்தியைக் காட்டி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், இவ்வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளதாகவும், மனுதாரர்களுக்கு ஜாமீன் வழங்க ஆட்சேபனை தெரிவித்தார்.

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள் மீது பிரிவுகள் 296(b), 351(3) BNS மற்றும் 25(1)(A) இந்திய ஆயுதச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் 11.05.2026 அன்று குற்றம்

நடைபெற்றுள்ளது. எதிரிகள் கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்றும், எதிரிகள் மீது 24 குற்றவழக்குகள் நிலுவையில் உள்ளது, இருப்பினும் மனுதாரர்கள் சிறையில் இருந்த காலத்தை கருத்தில்கொண்டு, இந்த நீதிமன்றம் மனுதாரர்களுக்கு நிபந்தனைகளுடன் ஜாமீன் வழங்கி உத்தரவிடுகிறது.

முடிவில், இம்மனு நிபந்தனையுடன் அனுமதிக்கப்பட்டு, மனுதாரரர்களை ஜாமீனில் விடுவிக்க உத்தரவிடப்படுகிறது. மேலும் மனுதாரர்கள் தனித்தனியாக ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) மதிப்பிலான பிணையப் பத்திரத்தையும், அதே தொகைக்கு இரு தனிப் பிணையாளர் (surety) பிணையத்தையும், **கீழ்வேளூர்** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவரின் திருப்திக்குட்பட்டு தாக்கல் செய்ய வேண்டும். பிணைதாரர் (Surety) தனது நிழற்படத்தையும், இடது கை பெருவிரல் ரேகையையும் பிணைப் பத்திரத்தில் பதிக்க வேண்டும். மேலும், பிணைதாரரின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக, அவருடைய ஆதார் அட்டை அல்லது வங்கி சேமிப்புப் புத்தகத்தின் நகலை நீதிபதி பெற்றுக்கொள்ளலாம்.

1. மனுதாரர்கள் சிறையிலிருந்து விடுதலையான தேதியிலிருந்து மறு உத்தரவு பிறப்பிக்கப்படும்வரை காலை 10.00 மணிக்கு நீதித்துறை நடுவர் எண்.1, நாகர்கோவில், கன்னியாகுமரி நீதிமன்றத்தில் ஆஜராகி கையெழுத்திடவேண்டும்.

2. விசாரணை நீதிமன்றத்தில் அல்லது காவல்துறை முன், அவர்கள் அழைக்கும் போதெல்லாம் நேரில் ஆஜராக வேண்டும்.

3. வழக்கில் தொடர்புடைய சாட்சியங்களை கலைக்கவோ, மிரட்டவோ, அல்லது சாட்சிகளைப் பாதிக்கக்கூடிய எவ்வித செயல்களிலும் ஈடுபடக்கூடாது.

4. மனுதாரர்கள் விசாரணை அல்லது வழக்கின் விசாரணையின் போது தலைமறைவாகக் கூடாது.

5. ஜாமீனில் இருக்கும் காலத்தில் வேறு எந்த குற்றச் செயல்களிலும் ஈடுபடக்கூடாது.

இன்று (08.06.2026) திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/- ஜி.எம். வசந்தி,
மாவட்ட அமர்வு நீதிபதி (முகூபொ)
(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)
நாகப்பட்டினம்.

நகல்

1. மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர், கீழ்வேளூர்
2. நீதித்துறை நடுவர் எண்.1, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.
3. காவல் ஆய்வாளர், வேளாங்கண்ணி காவல்நிலையம்